# பாலர் கல்வி

| தொகுதி 6 | 1942 ௵ பிப்ரவரி ௴<br>விஷு ௵ மாசி ௴ | பகுதி 11 |
|---|---|---|

## தாய்மொழி கற்பித்தல்

M. Subaramaniam, *L. M. C. High School, Shiyali.*

### VII. வாசக பாடங்களைக் கற்பித்தல்

தாய்மொழி வாசக பாடங்களைக் கற்பிக்கும் நோக்கமும் முறையும்

வாசக பாடங்களைப் பற்பல வகுப்புக்களில் மாணவர்களுக்குப் போதிக்கும் முறைகளைப்பற்றியும், நோக்கங்களைக் குறித்தும் திட்டமாகக் கூற முடியாது. எவ்வித முறையும் நோக்கமும் எப்போதும் பிள்ளைகளின் வயது, அவர்களுடைய மனோசக்தி, அவர்கள் வசிக்கும் சுற்றுப்புறத் தன்மை, சமூகத் தேவை, ஆசிரியரின் அறிவுத்திறம், தற்போதுள்ள பரீக்ஷைப் பலனைப்பற்றிய இலக்கு, ஆகிய இவற்றைப் பொருத்ததாக இருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் பிரிக்கப்பட்டிருக்கும் நாற்பது பிள்ளைகள் அடங்கிய "வகுப்பு" என்னும் ஒரு பிரிவினை, எவ்வித முறைக்கும் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. ஒரு வகுப்பில் பற்பல வயதுள்ள பிள்ளைகளும் வெவ்வேறு திறமையுடையவர்களாக இருக்கக்கூடும். இவ்வாறே ஒரே வகுப்புப் பிள்ளைகளில் ஒருவனுக்கு அனுசரித்த முறை மற்றொருவனுக்குப் பொருந்தாது. ஒரே மாணவன், ஒரே பாடம் ஒரே ஆசிரியர் என்றால் நோக்கமும், முறையும் மிகச் சுலபமாகப் புலப்படலாம். எப்படி இருப்பினும், தக்க உச்சரிப்பு, சொற்பயிற்சி, நாத்திறமை, சுவாசப்பயிற்சி என்னும் நோக்கமும், கூடுமான வரையில் பிள்ளைகள் பிழை செய்யா வண்ணம் அவர்களுக்கு உபகாரம் செய்தலுமே ஆசிரியர் ஆரம்ப வகுப்பில் கவனிக்கத்தக்கவைகளாகும். ஏனென்றால் இவ்வகுப்புக்களில் பாலர்கள் தங்களை அறியாமலே பிழைசெய்கின்றார்கள். இப்படி பிழை செய்யும்போது வெகு கவனத்துடனும், ஜாக்கிரதையாக

வும், சுறுசுறுப்பாகவும் ஆசிரியர்கள் இருக்கவேண்டும். சற்று உயர்ந்த வகுப்புப் பிள்ளைகளுக்கு அவர்கள் வேண்டும்போது ஆசிரியர்கள் உதவி செய்யவேண்டும். மாணாக்கர்களுடைய ஊக்கம், உழைப்பு, விடா முயற்சி, தனித்தன்மை ஆகிய இவைகளைப் பெருக்கி, பொருள் விளங்க உரக்கப் படித்தல், அமைதியாக மௌனமாய்ப் படித்தல், சொல் நயம், பொருள் விளக்கம் காட்டிப் படித்தல், விரைவில் கருத்து அறிய படித்தல், நன்றாக உரையாடும் திறமை, ஆகிய இவைகளையும் சிறப்பாக விருத்தியாக்க வேண்டும். வாசக பாடங்களின் நோக்கமும் இதுவேயாகும்.

## எல்லா வகுப்புக்களிலும் கவனிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்கள்

எந்தப் பாடத்தையும் போதிப்பதற்குமுன், கவனிக்க வேண்டிய முதல் விஷயம் அப்பாடத்தைப்பற்றிய சுருக்கமான பேச்சும் சம்பாஷணையுமே யாகும். இதனால் பிள்ளைகளுடைய விருப்பம், மனப்பாங்கு முதலியவற்றை ஆசிரியர் அறிந்துகொள்வதோடு, அவர்களுடைய ஆவல், கவனம் முதலியவற்றையும் தூண்டிவிடலாம். புத்தகப் பாடம் ஒன்றை ஆரம்பிக்கும்போது அதன் தலைப்பில் ஒரு படம் இருக்குமாயின் அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பிள்ளைகளோடு ஆசிரியர் கலந்துபேச வேண்டும். அவர்களைச் சுயேச்சையாகப் பேசவும் விடவேண்டும். பாட விஷயத்தைப்பற்றி ஏற்கனவே சில பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கலாம். அல்லது சிலருக்கு நேரான அனுபவமும் இருக்கலாம். இப்படிப்பட்ட பிள்ளைகளைத் தாராளமாகப் பேசவிட வேண்டியது ஆசிரியரின் முதல் கடமையாகும். இத்தகைய தாராளமான பேச்சு முழு வகுப்புக்கும் ஓர் உற்சாகத்தைத் தருவதுடன் பாடத்திற்கும் ஒரு முன்னுரை போல் இருக்கிறது. பின்பு பிள்ளைகளுக்குத் தெரியாத புதுச் சொற்களை ஆசிரியர்கள் உதாரணங்களோடு விளக்கிக் காட்டி கரும்பலகையில் எழுத வேண்டும். இவ்வித சொற்களையும் சொற்றொடர்களையும் பிள்ளைகள் தங்கள் சொந்த வாக்கியங்களில் உபயோகிக்கவேண்டும். பிள்ளைகள் வாசக பாடங்களைப் படிப்பதற்கு முன், ஆசிரியர் முகமலர்ச்சியோடு அழுத்தமும் திருத்தமுமாக ஒருதரம் மாதிரி வாசிப்பு வாசிப்பது நல்லது. இப்படி வாசித்துக் காட்டிய பாகத்தை பிள்ளைகளைத் திடீரென்று உடனே படிக்கச் செய்யாமல், சற்று மௌனமாக சில நிமிஷ நேரம் அவர்களை வாசிக்க விட்ட பிறகு உரக்கப் படிக்கும்படி சொல்லவேண்டும். உடனே படிக்கச் சொன்னால் சில பிள்ளைகள் தடுமாறுவார்கள். பிள்ளைகள் படிக்கின்ற சமயத்தில் ஆசிரியர் இடையிடையே அவர்களுடைய பிழைகளைத் திருத்துவது அவ்வளவு சரி அல்ல. ஒரு பாகம் படித்து முடிந்தபின் பிள்ளைகள் செய்த பிழைகளைச் சொல்லவேண்டும். ஏனென்றால் பாடத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போது பிள்ளைகளின் கவனம் முழுவதும் படிப்பிலேயே இருக்கும். பிழைகளை அந்தச் சமயத்தில் ஆசிரியர்கள் திருத்தினால் அவர்கள் அவற்றைக் கவனிக்க முடியாது. பிள்ளைகள் படித்த

பாகத்தை அவர்கள் நன்றாக அறிந்துகொண்டார்களா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசிரியர்கள் சிற்சில கேள்விகளைக் கேட்கவேண்டும். முழுப் பாடத்தையும் மாணவர்கள் படித்த பின்பு, படித்த பாகத்தின் கருத்தைச் சுருக்கமாக அவர்கள் சொல்வது நலமாகும்.

## ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளுக்கு வாசக பாடம்

ஆரம்ப வகுப்புக்களில் படிக்கும் பாலர்களின் குணம் பொதுவாக விளையாட்டில் பிரியமுள்ள தன்மையேயாகும். ஆதலால் இவ்வகுப்புப் பாலர்களுக்கு இத்தகைய குணவிசேஷத்தையே ஆதாயப்படுத்தி வாசக பாடங்களைக் கற்பிக்கவேண்டும். வர்ணமிட்ட அழகான படங்களைப் பிள்ளைகளின் கையில் கொடுத்து அவற்றில் இருக்கும் பொருட்களின் பெயர்களை எழுதச் சொல்லலாம். இப்படி எழுதினவற்றைப் படிக்கச் சொல்லலாம். ஓர் அட்டையில் ஒரு வாக்கியத்தை எழுதி, அதில் ஒரு காலியான இடத்தைப் பூர்த்திசெய்யும்படி விட்டு, பின்பு அவ்விடத்தில் தகுந்த சொற்களை அமைத்து வாசிக்கச் சொல்லலாம். இம்முறையில் ஒரு தகுந்த சொல்லைப் புணர்க்கும் பொருட்டு முழு வாக்கியத்தையும் செவ்வனே சிறுவர்கள் வாசிக்க நேரிடுகிறது. ஒரு வகுப்பை நான்கு அல்லது ஐந்து பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி பயிற்சிகளை மேல்கூறியபடி அட்டையில் எழுதப்பட்டபடி தந்து அவற்றை வாசித்து பின்பு சரியான சொற்கள் விடப்பட்ட இடத்தில் அவற்றைச் சேர்த்துப் படிக்கச் செய்யலாம்.

இப்படிச்செய்தால் ஒவ்வொரு பிரிவு பிள்ளைகளும் வெகுசுறுசுறுப் பாகத் தத்தம்வேலையில் கவனம் செலுத்தக்கூடும். அட்டைகளிலோ கரும் பலகைகளிலோ "புதிர்" அல்லது "விடுகதை" போன்ற சிறுவாக்கி யங்களை எழுதி அவற்றிற்கு உத்தேசமான விடைகளைச் சொல்ல ஒவ் வொரு பிள்ளையையும் கேட்கலாம். அல்லது பிள்ளைகளே அப்புதிர் களைப் படித்து தகுந்த விடையையோ உத்தேசமான விடையையோ எழுதி வாசிக்கும்படி சொல்லலாம். சில அட்டைகளில் பாடசம்பந்த மான சிறுகேள்விகளை எழுதி அவற்றைப் பிள்ளைகள் வெகுசீக்கிரம் படித்துக்கொள்ளும்படிகாட்டி பின்பு அக்கேள்விகளுக்கு விடைகூறும் படி செய்யலாம். ஒரு பாடத்தில் வரக்கூடிய பெயர்ச்சொற்களை அந் தந்தச் சொற்களுக்குப் பதிலாகப் படத்தை எழுதி வாக்கியத்தைச் சேர்த்துப்படிக்கும்போது. படத்தை ஒட்டிய சொல்லைக்கூட்டிப் படிக்க அப்பியசிக்கலாம் ["கல்கி" பத்திரிகையில் பாலர் பகுதியில் இப்படிப் பட்ட அப்பியாசங்கள் இருக்கின்றன]. பெயர் உரிச்சொல், வினை உரிச்சொல் முதலிய சொற்களைத் தகுந்தபடி பிறசொற்களோடுக் கூட்டிப்படிக்கத் தேவையான சிறுபடங்களை எழுதி, அவற்றைக்கொண்டு வாக்கியங்களை அமைத்துப் படிக்க உற்சாகப்படுத்தலாம். ஒரு விஷ யத்தைக் குறித்து ஒரு பாடத்தில் கண்டிருக்கும் விஷயத்தைப்

பற்றியோ, தேவையான சொற்கள் தோன்றும்படி ஆசிரியர் சம்பாஷணை செய்து, பின்பு அச்சொற்களைச் சிறுவாக்கியங்களில் அமைத்துப் படிக்கச்சொல்லலாம். இச்சொற்களைப் பிள்ளைகள் சொல்லும்போது ஆசிரியர்கள் கரும்பலகையில் எழுதுவது நலமாகும். ஒரு விஷயத்தையோ ஒரு பொருளையோ பற்றிய சிலமுக்கியமான சொற்களைத்தந்து அவற்றைக் கோர்வையாகவும், தொடர்ச்சியாகவும் ஒரு சிறுகதை உருவமாகச்சொல்ல பயிற்சி அளிக்கலாம். பொதுவாய்ப் பிள்ளைகளின் அனுபவத்தைப்பற்றிய சொற்கள் இருந்தால் அதிக விசேஷம். மேலும், பிள்ளைகளுடைய சுற்றுப்புறம், வீட்டு நிலைமை, பள்ளிக்கூடம், முதலியவற்றைப்பற்றின அனுபவசொற்கள் அடங்கினபாடத்தை விசேஷமாக சம்பாஷித்தபின்பு படிக்கச்செய்வது அவர்களுக்கு அப்பாடத்தில் உற்சாகம் உண்டாகும். ஒரு தலைப்பின் கீழ் சிலசொற்களையும், வேறு தலைப்பின்கீழ் அச்சொற்களுக்குப் பொருத்தமான சில சொற்களையும்தந்து, கிரமமானமுறையில் எந்தெந்த சொல் ஒன்றாகப் பொருந்தி ஒரு வாக்கியமாகும் என்பதைக் கண்டுபிடிக்கச் செய்யலாம். ஒரு வாக்கியத்திலுள்ள சில சொற்களின் அமைப்புக்களை மாற்றி, அவற்றை முறைப்படி எழுதி வாசிக்கப் பயிற்சிதரலாம். பெயர்ச்சொல் அட்டவணை ஒரு புறத்திலும், அதற்குத் தகுந்த உரிச்சொல், வினைச்சொல் முதலிய சொற்களின் அட்டவணை மற்றொரு புறத்திலும்தந்து, பெயர்ச் சொற்களுக்குத் தகுந்த உரிச்சொல் முதலியவற்றைப் பிள்ளைகளை எழுதிவாசிக்கச்சொல்லலாம். கதைகளை ஒட்டிய சிலசொற்களை மாத்திரம் தந்து அக்கதையைப் பூர்த்தி செய்ய உதவிசெய்யலாம். ஒரு பாடத்தைப்படித்தபின்பு, அப்பாட சம்பந்தமான பொருட்களை நன்றாக அறிந்துகொள்ள, களிமண் வேலை, சித்திரம், கொட்டைவைத்தல் முதலிய தொடர்ச்சி சம்பந்த முறைப்படி, (**Principle of Correlation**) பயிற்சிகள் கொடுக்கலாம். ஓர் அட்டையின் தலைப்பில் சிலசொற்களைத் தந்து, பிறகு அதன்கீழ் சில கோடிட்ட வாக்கியங்களை எழுதி, தலைப்பில்காணும் பொருத்தமான சொல்லை, கோடிட்டவாக்கியத்தில் அமைத்து அதைச் சேர்த்துப் படிக்கச்செய்யலாம். ஒருபாடத்தில் ஏதாவது ஒரு விசித்திரமான பெயர்ச் சொல்லோ, அல்லது வேறு சொல்லோ வருமாயின் அதை விளக்க ஆசிரியர் ஒரு கைப்படத்தையோ அல்லது அச்சுப்படத்தையோ காட்டுவது உசிதம். முடியுமானால் கரும்பலகையில் சித்திரம் எழுதியும் காட்டலாம்.

### பாட புத்தகங்களை போதிக்கும்போது கவனிக்க வேண்டியவை

பிள்ளைகளைப் படிக்கும்படி சொல்லிவிட்டு ஆசிரியர்கள் தங்களுடை கவனத்தை வேறுஇடத்தில் செலுத்துவதனால், பற்பல பிரதிகூலங்கள் ஏற்படுகின்றபடியால் அவர்கள் சுறுசுறுப்பாகவும், உற்சாகத்தோடும் இருக்கவேண்டும். வரிசைக்கிரமமாகப் பிள்ளைகளை படிக்கச்

செய்வதைக்காட்டிலும், அவ்வப்போது குறிப்பிட்ட பிள்ளைகளை வாசிக்கச்சொன்னால், அவர்கள் அதிக கவனமாயிருப்பதோடு ஜாக்கிரதையாகவும் இருப்பார்கள். ஆரம்ப வகுப்பில் அதிக அவசரமாகப் பாடங்களை முடிக்கக் கருதக்கூடாது படிக்கின்ற பாகத்தைப் பிள்ளைகளை எழுதும்படி செய்யவேண்டும். பாடமுடிவில் சொல் எழுதுதல் (**Dictation**) நலமென்று பலர் கருதுகின்றார்கள். சிறுபிள்ளைகளுக்குச் சொல்வளம் குறைவாக இருப்பதனால் அவர்கள் வெகு சீக்கிரமாகப் பலசொற்களைச் சேர்த்துப்படிக்க முடியாது. இச்சமயங்களில் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்குச்சற்று அவகாசம்தந்து அவர்களை மௌனமாகப் படிக்கச்செய்வது நலம். பிறகு அவர்கள் தாராளமாக உரக்கப்படிக்க முடியும். அடிக்கடி பிழைகளைத்திருத்துவதனால் சில புத்திக்குறைவான மாணவர்களை அதைரியம் உண்டாக்கிப் படிப்பதில் அவர்களுக்கு ஆசையும், ருசியும் ஏற்படாமல் வெறுப்புத்தோன்றி மட்டியாகிவிடுகின்றனர். ஆகையால் ஆசிரியர்கள் வெகுயோசனையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

பிள்ளைகள் வாசிக்கவேண்டிய பாட விஷயத்தைப் பிள்ளைகளுடைய அனுபவ சம்பந்தமாக யோசித்து அவர்களுடன் கலந்து முதலில் பேசுவதும் பாடம் முடிந்தபின் படித்த பகுதியை நாடக ரூபமாகவோ சம்பாஷணை மூலமாவோ அவர்களைக்கொண்டு நடித்துக் காட்டுவதும் சிறந்ததாகும். முடிவாகப் பிள்ளைகளுக்கு எந்தப் பாகத்தில் விருப்பமாக இருக்கின்றதோ அதைக் குறித்து அவர்களைப் பேச விட்டால் விஷய அறிவோடு, சொற்களைச் சரியான முறையில் உபயோகித்துப் பேசும் பழக்கமும், பயிற்சியும் அவர்களுக்கு உண்டாகும். சில விசேஷமான பாடங்களில் மரபுச் சொற்களும், பழமொழிகளும், கட்டு வாக்கியங்களும் சிறு இலக்கண விளக்கங்களும் இருக்குமாயின் அவற்றை மிகச் சுருக்கமாகவும் உதாரணங்களைக்கொண்டும் விளக்கவேண்டும். இலக்கண பாகத்தைக் குறித்து விஸ்தரிப்பே கூடாது.

### இடை உயர் வகுப்பு மாணவர்களுக்கு வாசக பாடம்

இவ்வகுப்புக்களில் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு உச்சரிப்பு, நாப்பழக்கம், வாய் மொழிப் பழக்கம், முதலியவற்றில் பயிற்சி தந்தது போல் செய்யாமல், அவர்கள் வேண்டும்போது ஆசிரியர்கள் உதவியளித்தால் போதுமானது. மாணவர்கள் சுயமுயற்சியிலேயே வேலை செய்வது மிகவும் உத்தமம். பல சொற்களைப் பொருள்படக்கூட்டி விரைவாக வாசிக்கும் தன்மையை விருத்தியாக்கவேண்டும். உரைநடை பாகத்தை மாணவர்கள் படிக்கும்போது, அதில் காணும் சொல்லழகு, பொருள் பொலிவு, கருத்துப் போக்கு, நடை அழகு, முதலியவற்றை உணர்ந்து படிக்க, அவர்களுக்குத் தகுந்த முறைகளைக் காட்ட வேண்டும். மேலும் தாங்கள் படித்த பாகத்தை மாணவர்கள் சுயமாக எழுதுவதற்குப் போதுமான தனித் திறமையையும் அடைய வேண்டும். இத் திறமையை உண்டாக்க, ஆசிரியர்கள் விசேஷமான புத்தகங்களை

மாணவர்களுக்குப் பிரத்தியேகமாக வாசித்து அறிந்து கொள்ள முதல் பயிற்சி அளிக்கவேண்டும். படித்ததை மாணவர்கள் சிந்திக்கவும், சிந்தித்ததை அவர்கள் எழுதவும் பிறருக்குச் சொல்லவும், ஒரு பாடத்தைப் பற்றி மதிப்புரைக் கூறவும், ஒரு பாடத்தின் விசேஷ நிலைமையை உணர்வதும் ஆகிய இவற்றையே நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

**சில குறிப்புக்கள்**


(a) மொழி பயிற்சிக்கு வாசகங்கள் ஒரு ஆதாரமே யொழிய முடிவில்லை. இந்த லக்ஷியத்தை ஆசிரியர்கள் எப்போதும் மனத்தில் அமைத்துக் கொள்ளவேண்டும். வேண்டிய விஷயங்களைக் கண்டபடி சொல்லாமல், ஒரு முறைப் பிரகாரம் ஒரு விஷயத்தைக் குறித்துப் பிள்ளைகள் இலேசாகத் தெரிந்து கொள்வதற்கும், ஆசிரியர்கள் ஒரு ஆதாரத்தை ஒட்டி மொழி வளர்ச்சியை பெருக்குவதற்கும் கருவியாக இருப்பது வாசகங்களாகும். எனவே இப்புத்தகங்களைப் பிள்ளைகளுக்குப் போதிக்கும் முன் அவற்றில் உள்ள கடின சொற்கள், புதுச்சொற்கள், நடை, விஷயப்போக்கு, மரபுச் சொற்றொடர்கள், இலக்கண விசேஷங்கள், நூதன விஷயங்கள், மாணவர்களின் அனுபவத்திற்கு ஒத்தவைகள் முதலியவற்றை நன்றாக ஆராய்ந்து அறிந்து பாடக்குறிப்பு எழுத வேண்டும். பின்பு கற்பிக்க வேண்டிய மாதிரியை, வகுப்புக்குத்தக்கவாறு ஆசிரியர் தம்முறைகளை ஒழுங்கு செய்து கொள்ளவேண்டும். (b) முன்னுரையில் அதிக நேரத்தைக் கழிப்பது உசிதமல்ல. பிறகு மாணுக்கர்களை சில நிமிஷ நேரம் மௌனமாக வாசக பாடங்களைப் படிக்கச் சொல்லி விளங்காத சொற்களையும், [illegible] படி செய்யவேண்டும். (c) படித்த [illegible] மாணவர்கள் நன்றாகவோ சுமாராகவோ அறிந்து கொண்டார்களா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசிரியர் சில கேள்விகளைக் கேட்கவேண்டும். பிறகு ஆசிரியர் ஒரு பகுதியை மாதிரியாகப் படித்துக் காட்டவேண்டும். உச்சரிக்கப்படும் ஒவ்வொரு சொல்லையும் திருத்தமாகவும், விளக்கமாகவும், வேண்டிய போது உணர்ச்சியோடும் மாணவர்களுக்குப் படித்துக் காட்டினால், அவர்களே சில சமயங்களில், சொல் அழகு, கருத்து முதலியவற்றைத் தெரிந்து கொள்வார்கள். (d) பாட புத்தகங்கள் தவிர இதர புத்தகங்களைப் படிக்கும்போது மாணவர்களுக்குச் சிற்சில [illegible] செய்யவேண்டும். சில புத்தகங்களை ஊன்றியும் வேறு சிலவற்றை மேல் நோக்காகவும், இன்னும் சிலவற்றை சிந்தித்தும் படிக்க மாணவர்கள் தெரிந்து கொள்வதற்கு ஆசிரியர் வழி காட்டவேண்டும். அவர்கள் ஒரு புத்தகத்தின் சாராம்சங்களைத் தெரிந்துகொள்ளவும், விசேஷ வாக்கியங்களை மனப்பாடம் செய்யவும், படித்தவற்றைச் சுருக்கமாகச் சொல்லவும், பயிற்சி அளிக்க வேண்டும். இப்படிச் செய்வதனால் பிள்ளைகளுக்குத் தாய் மொழி இலக்கியங்களில் அதிக விருப்பம் தானாகவே வந்துவிடும்.

(தொடரும்.)

# கலையும் கைத்தொழிலும்—IX

**R. M. Savur**, *Divisional Inspector of Schools, Coimbatore.*


நாம் இது வரையில் முக்கியமாக கலையைப் பற்றிப் பேசினோம். இப்பொழுது கைத்தொழிலைக் கவனிப்போம். இரண்டு தோல் துண்டுகளின் ஓரங்களை நூலினால் எவ்வாறு தைப்பது என்பதை முன்னமேயே தெரிந்து கொண்டோம். நூலுக்குப் பதிலாக தோலையே உபயோகிக்கலாம். தைப்பதற்கு உபயோகிக்கப்படும் தோலின் அகலம் குறைவாக இருக்கவேண்டும். தோலின் ஓரங்களிலுள்ள துவாரங்களின் வழியே தைக்கும் தோலை (**Thong**) நுழைத்துத் தைக்கவேண்டும். தைக்கும் தோல் நாம் செய்யும் தோல் பையின் நிறத்தினின்றும் மாறுபட்டதாக இருந்தால் நன்றாக இருக்கும். எனவே தைக்கும் தோல் அழகுபடுத்துவதற்கும் உபயோகமாகிறது. தோலில் துவாரங்கள் செய்வதற்கு ஒரு துவாரம் செய்யும் கருவி வேண்டும். இது இப்படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.



துவாரம் செய்யும் கருவி

மேலே காட்டப்பட்டுள்ள துவாரம் செய்யும் கருவியை நாம் பழைய, அல்லது உடைந்து போன எஃகு அரத்தால் செய்துகொள்ளலாம். இல்லாவிட்டால் கிராமங்களிலுள்ள கருமானின் உதவியால் செய்யலாம்.


கீழே உள்ள படத்தைக் கவனித்தால் தோலினால் தைக்கும் விதத்தை அறியலாம்.




ஒரு சிறிய (தோல்) பை தைப்பதற்கு ஒரே தைக்கும் துண்டு போதுமானது. ஆனால் பெரிய தோல்பைகளைத் தைப்பதற்குப் போதுமான நீளமான துண்டு கிடைக்காது. இரண்டு மூன்று தோல் துண்டுகளைச் சேர்க்க வேண்டியிருக்கும். இரண்டு தோல்களை இணைக்கும் விதமும் படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

**A** என்பது உபயோகிக்கப்பட்ட தோலின் நுனி. இது கத்தி அல்லது உளியினால் கூர்மையாகச் சீவப் பட்டிருக்கிறது. **B** என்பது இன்னொரு தைக்கும் தோலின் நுனி. இதுவும் கூர்மையாகச் சீவப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு நுனிகளையும் **C, D** யிலிருப்பது போல் இணைத்து வைத்தால் தோலின் கனம் ஒரே சீராக இருக்கும்.

இந்த இரண்டு நுனிகளைப் பசையின் உதவியால் ஒட்டலாம். ஒட்டிய பிறகு நன்றாக அமுக்கி வைத்தால் இரு நுனிகளும் ஒட்டிக்




கொள்ளும். இவ்வாறு நன்றாக நுனிகளை இணைத்த பிறகே தைக்க உபயோகிக்க வேண்டும். C D என்னும் நீளம் இரண்டு துவாரங்களின் வழியே செல்லுவதற்குத் தகுந்த அளவுள்ளதாக இருக்க வேண்டும்.

தோலினால் தைக்கும்போது கீழ்க்கண்ட விஷயங்களை கவனிக்க வேண்டும்.

(1) துவாரங்களை சம தூரத்தில் செய்ய வேண்டும்.

(2) அவை நேர் கோட்டில் தோலின் ஓரத்திலிருந்து ஒரே தூரத்தில் இருக்கவேண்டும்.

(3) துவாரங்கள் ஒரே அளவுள்ளவைகளாக இருத்தல் அவசியம்.

தைக்கும் தோலை பெரிய கத்தரிக்கோலினால் வெட்டிக் கொள்ளலாம். இதற்குப் பதிலாக நான் 'ஸெல்லோபோன்' (Cellophone) காகிதத்தை உபயோகித்திருக்கிறேன். தைக்கும் துண்டின் அகலம் துவாரத்தைப்போல் நான்கு மடங்கு இருக்க வேண்டும். இத் துண்டை மடித்து உறுதியுள்ளதாகச் செய்து கொள்ள வேண்டும். தைக்கும் துண்டுகளை துவாரங்களில் நுழைப்பதெப்படி? இவ்விதத்தை இன்னொரு கட்டுரையில் எழுதுகிறேன். அதற்குள் நேயர்கள் யோஜனை செய்து இம்முறையைக் கண்டுபிடிக்க முயலவேண்டும்.

தைக்கும் வேலையின் ஆரம்பத்தைப் பற்றியும் முடிவைப்பற்றியும் ஒரு வார்த்தை. தைக்க ஆரம்பிக்கும்போது முதல் நுனியை நூலால் தைக்க வேண்டும். முதல் துவாரத்தின் வழியே தைக்கும் துண்டு இரண்டு தடவை வரும். தைக்கும் துண்டின் கடைசி நுனியை அதற்குப் பக்கத்திலுள்ள தையலின் அடியில் சொருகிவிடலாம். அல்லது தோலின் ஓரங்களின் இடையில் பசையினால் ஒட்டி விடலாம். பசையினால் ஒட்டினால் நுனியை ஒரு சுத்தியால் தட்டி மேடு பள்ளம் இல்லாமல் செய்ய வேண்டும்.

# பிள்ளைகளின் கையெழுத்து—2

R. Mahadevan, B. A., L. T.

(தைமீ 343-ம் பக்கத் தொடர்ச்சி)

## தெளிவாக எழுதுதல்

'பிள்ளையின் மனம்' என்னும் தலைப்பின் கீழ் பாலர் கல்வியில் வந்த கட்டுரைகளைப் படித்தவர்கள் குழந்தைகளின் கற்பனா சக்தியை நன்கு அறிவார்கள். பானை மாதிரி போட்டு விட்டு "பூனை" என்பார்கள் குழந்தைகள். பானையைப் பூனையாகவும், பூனையை யானையாகவும் கருதும் கற்பனா சக்தி அவர்களுக்கு உண்டு. இக்கற்பனா சக்தியை நாம் நல்ல வழிகளில் உபயோகிக்க வேண்டுமே ஒழிய பானையை பூனை என்று முழுவதும் அங்கீகாரம் செய்யக் கூடாது. முழுவதும் சரி என்று சொல்லக் கூடாதென்றால் கொஞ்சமாவது சரி என்று சொல்லலாமா? ஆம், சொல்லத்தான் வேண்டும். பானையின் பக்கமும் வளைந்திருக்கிறது, பூனையின் உடலும் வளைந்து தானே இருக்கிறது! அது வரையில் சரி தான். "பூனைக்குக் காலெங்கே?" என்றுகேட்டால் தெனாலிராமனை "குதிரைக்குத் தலையெங்கே?" என்று கேட்டதற்கு என்னபதில் வருமோ அதேபதில்தான் வரும்.

மேற்கூறியதுபோல எழுத்துக்களிலும் சில பிள்ளைகள் கற்பனா சக்தியை உபயோகித்து பல கோடுகளையோ எழுத்துக்களையோ விழுங்கி விடுவார்கள். ஆதிமுதற்கொண்டே இந்தவிதமான கற்பனா சக்திக்கு இடம் கொடுக்கக்கூடாது. 'கையெழுத்து நன்றாக இருந்தால், படிப்பு வாராதபோதிலும் கடையிலாவது கணக்கெழுதலாமே' என்று கிராமங்களில் பிள்ளைகளின் பெற்றோர்கள் சொல்லுவார்கள். ஆம் இது மிகவும் உண்மைதான். கையெழுத்து சுத்தமாக இல்லாத பிள்ளைகளை 2 அல்லது 3 ரூபாய் சம்பளத்துக்குக்கூட கடைகளில் வைத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் சில ஆசிரியர்கள் "நமக்கு வரும் கடிதங்களில் மேல் அதிகாரிகளுடைய (பெயரின்) கையெழுத்து ஒன்றும் விளங்கவில்லையே! அவர்கள் ரூ. நூறுமுதல் ஆயிரம் வரையில் சம்பாதிக்கவில்லையா?" என்று எண்ணலாம். இப்பொழுது நண்பர்களுக்கு நமது வீடுகளில் வழங்கும் பழமொழியை ஞாபகப்படுத்தவேண்டியிருக்கிறது. "மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் பொன் கலம்." மேல் அதிகாரிகள் எப்படிவேண்டுமென்றாலும் எழுதலாம். ஆசிரியர்களாகிய நாம் கவனக்குறைவாகக் கரும்பலகையிலோ, பிள்ளைகளின் (நோட்டு) புத்தகங்களிலேயோ எழுதக்கூடாது. ஏன்? மேல் அதிகாரிகளா பிள்ளைகளுக்கு எழுத்துக்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள்? நாம் அல்லவா? கையெழுத்துக்கு முதலில் அவசியமானது தெளிவாக எழுதுதல். தெளிவாக எழுதுதல் என்றால் ஒவ்வொரு எழுத்தும் சந்தர்ப்பத்தின் உதவியில்லாமலே சுத்தமாக, சந்தேகமின்றி எழுதுதல் என்றுதான் அர்த்தம். பானைக்கும் பூனைக்கும் வித்தியாசம் தெரிவதுபோல 'ச', 'க', 'த' முதலிய எழுத்துக்களின் பேதம் நன்குதெரிய வேண்டும்.

# தேகாப்பியாச விளையாட்டுகளைப் பற்றிய விளக்கம்

T. S. Muthuswami, *E. R. High School, Trichinopoly.*

(340-ம் பக்கம் தொடர்ச்சி)

## நமது தாய்நாட்டு விளையாட்டுகள்

1. நோண்டி :—(*a*) தனிக்கை—ஒரு வட்டம்—உள்ளேபோவதற்கு ஒருபாதை. ஒருபையன் நொண்டியடித்து உள்ளே செல்லவேண்டும். அவன் யாரைப் பிடிக்கிறானோ அவன் காய். காய் ஆனவன் வேறொருவனைப் பிடிக்கவேண்டும்.

(*b*) மேற்சொன்னது போலவே—ஆனால் ஒருபையனால் எவ்வளவுபேரைப் பிடிக்கமுடியுமோ அவ்வளவு பேரையும் பிடிக்கப்பார்க்க வேண்டும்.

(*c*) இரு கக்ஷிகளாகப் பிரிக்கவும்—ஒரு கக்ஷி மற்றொரு கக்ஷியிலுள்ள எல்லோரையும் பிடிக்க எவ்வளவுநேரம் ஆகிறதென்று பார்க்க வேண்டும். எந்தக் கக்ஷி குறைந்தநேரத்தில் பிடிக்கிறதோ அந்தக் கக்ஷிக்கு ஜெயம்.

(*d*) மேற்சொன்னது போலவே.—ஆனால் ஒரு கக்ஷியிலுள்ளவர்கள் எல்லாரையும் வெளிப்படுத்த எவ்வளவுபேர்கள் தேவையென்பதிலிருந்து குறைந்த எண்ணிக்கை யுள்ளவர்களைக்கொண்டு பிடிக்கப்பட்ட கக்ஷிக்கு ஜெயம்.

2. மிட்டாயோ மிட்டாய் :—பையன்கள் சாதாரணமாக வெளியில் நிற்கிறார்கள். ஒரு பையன் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போய்த் திரும்பிவருவான். அவன் வரும்பொழுது 'மிட்டாயோ மிட்டாய்' என்று கூவுவான். அப்படிக் கூவும்பொழுது எல்லாரும் ஓடி ஒளிந்து கொள்ளுவார்கள். ஒரு பையனைக் கண்டுபிடித்ததும் அவன் திரும்பி வந்து, முன் குழுமியிருந்த விடத்தை அடைவதற்குள் பிடிக்கவேண்டும். அகப்பட்டவன் மறு ஆட்டத்தை ஆரம்பிப்பான்.

குறிப்பு: பிள்ளைகள் இவ்விளையாட்டைத் தோப்புத்துரவு முதலிய இடங்களில் ஆடலாம்.

3. கல்லெறி :—ஒரு அரைச் செங்கல்லை முழுச்செங்கல்லின்மேல் வைக்கவும். ஒருபையன் வந்து அக்கல்லை எறிவான். இவ்வாட்டத்திற்குப் பிடிக்கவேண்டிய பையன் அக்கல்லிடம் ஓடி மறுபடியும் திரும்ப வேண்டும். அதற்குள் மற்றப்பையன்கள் ஓடி ஒளிந்துகொள்ளுவார்கள். பிடிப்பவன் மற்றவர்களைத் தேடுவான். அதற்குள் மற்றவர்கள் அக்கல்லையெடுத்து எறிய முயற்சி செய்யலாம். பிடிப்பவன் ஒரு பையனைக்கண்

டால், அவன் பெயரைச் சொல்லிக் கூப்பிடவேண்டும். அவன் பிடிப்பவன் கையில் அகப்படாமல், முழுச்செங்கல்லையோ அல்லது அரைச் செங்கல்லையோ தொட, அல்லது எறிய முயற்சி செய்யவேண்டும். அப்படியெறிந்தால் மறுபடியும் முதலில் ஆரம்பித்தவன் ஆட்டத்தை ஆரம்பிக்கவேண்டும். இல்லா விடில் பிடிபட்டவன் ஆரம்பிக்கவேண்டும்.

4. **பேப்பந்து**.—ஒருவன் ஒரு டென்னிஸ் பந்தை மேலே எறிவான். எல்லோரும் பிடிக்கமுயற்சி செய்வார்கள். பிடித்தவன் யாராவதொருவனை அடிக்கவேண்டும். அடிபட்டால் அவன் பந்தைப் பொறுக்கி யாராவதொருவனை யடிப்பான். அடிக்கத்தவறினாலும் பந்தைப் பொறுக்கி யடிப்பான். ஆகையால் பந்தைப்பொறுக்குவதிலும், ஓடுவதிலும் முயற்சி செய்வார்கள்.

5. **கல்லெடுத்தல்** :—இவ்விளையாட்டிற்கு 5 பேர்கள் வேண்டும். மேலே கண்ட மாதிரி கோடு போடவும். நடுவில் நான்கு கற்கள் இருக்கும். ஒருவன் கோட்டிலேயே ஓடிக்கொண்டும், கற்களைக் கவனித்துக் கொண்டும் இருப்பான். மற்றவர்கள் தலைக்கு ஒரு கல்லாக எடுக்க முயற்சிக்க வேண்டும். ஒருவன் ஒன்றுக்கு மேல் எடுத்தால், மற்றொருவனிடம் போய், அதைக் கொடுத்துவிட வேண்டும்; அல்லது மற்றொருவன் அவனிடம் வந்து அக்கல்லை வாங்கிக் கொள்ளவேண்டும். கல்லை எறியக்கூடாது. ஓடுபவன் தான் கோடுகளில் இருந்தபடியே, கல்லெடுக்கும்போது எவனையாவது தொட்டு விட்டால் அவன் ஔட்.

6. **பிள்ளையார் பந்து**.—தென்னாட்டு முறை :—ஒரு செங்கல்லைப் பிள்ளையார் என்று சொல்லி நிறுத்தி வைக்கவேண்டும். பிள்ளைகள் இரு கக்ஷிகளாகப் பிரிந்து நிற்கவேண்டும். ஒரு கக்ஷியிலுள்ள பையன் பந்தால் பிள்ளையாரை அடித்துக் கீழே வீழ்த்துவான். ஒவ்வொருவனும் மூன்று முறையடிக்கலாம். பிள்ளையார் கீழே விழுவதற்குள் பந்தைப் பிடித்தால், அவன் அது வரையில் எவ்வளவு தரம் அடித்திருக்கிறானோ அவ்வளவு தரம் அடிக்கலாம். இல்லாவிட்டால் எதிர்க் கக்ஷிக்காரன் பந்து கீழே விழுவதற்குள் அதைப் பிடித்தால் அடித்தவன் ஔட். எதிர்க் கக்ஷிக்காரர்கள் கையில் பந்து அகப்பட்டால், அவர்கள் எல்லோரும் தங்கள் கையில் பந்து இருப்பது போல் பாசாங்கு செய்து துரத்துவார்கள். பிள்ளையாரையடித்த கக்ஷிக்காரர்கள் பந்து கையில் இல்லாதவனைத் தொடவேண்டும். அப்படித் தொட்டால் பிள்ளையாரை யடிக்கலாம். பந்து கையிலிருப்பவன் எதிர்க் கக்ஷியிலொருவனை யடிக்க வேண்டும். மூன்று முறை அடிக்கத் தவறினால் அவன் ஔட். இப்படி மூன்று ஔட்களுக்குக் கக்ஷி ஔட் என்று பெயர்.

**வடநாட்டு முறை** :—சில கற்களை யடுக்கிப் பிள்ளையாராக வைப்பார்கள். அடிக்கும் கக்ஷி அடித்து அடுக்கைக் கலைத்தவுடன், எதிர்க் கக்ஷி பிள்ளையாரை அடுக்குவார்கள். அக் கக்ஷியைச் சேர்ந்த மற்றவர்

கள் பந்தை எதிர்க் கக்ஷியில் அகப்படாமல் தள்ளிக்கொண்டு போவார்கள். பிள்ளையாரை அடித்த கக்ஷியார் பந்தைப் பொறுக்கிப் பிள்ளையாரை அடுக்குவதற்குள், அக்கக்ஷியில் யாராவது ஒருவனைப் பிடிக்க வேண்டும். இதிலும் பந்து பறக்கும்பொழுது பிடித்தால அவன் ஔட். இப்படி மூன்று பேர் ஔட் ஆனால் கக்ஷி ஔட். மூன்று அடிகளில் பிள்ளையாரை அடிக்கத் தவறினாலும் அவன் ஔட்.

7. குச்சி விளையாட்டு :—ஒவ்வொருவனும் 3 அடிக் குச்சி வைத்துக் கொள்ளவேண்டும். முதலில் ஒருவன் வட்டத்தின் மத்தியில் நிற்க வேண்டும். அவன் தன் கைகளை உயர்த்திக் குச்சியைப் பிடித்துக் கொள்ளுவான். ஒரு பையன் தன் குச்சியால் வட்டத்தின் மத்தியிலுள்ளவன் குச்சியைத் தட்டி மற்றவர்கள் அக்குச்சியை எவ்வளவு தூரம் தள்ளிக்கொண்டு போக முடியுமோ அவ்வளவு தூரம் தள்ளிச் செல்லுவார்கள். குச்சியின் சொந்தக்காரன் தள்ளுபவர்களைப் பிடிப்பான். அவர்கள் குச்சியைச் செங்கல்லின் மேல் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி வைத்துக்கொள்ளாத பொழுது பிடித்தால் பிடிபட்டவன் ஔட். ஒருவன் ஔட் ஆனால் அவ்விடத்திலிருந்து மூச்சுப் பிடித்து வட்டத்திற்கு ஓடவேண்டும்.

குறிப்பு: பையன்கள் கையில் கற்கள் கொண்டுபோகவிடக்கூடாது

8. நின்றவனைப் பிடி :—குறிப்பிட்ட எல்லையில் ஒருவன் மற்ற பையன்களைப் பிடிக்க வருவான். ஒருவன் உட்கார்ந்து விட்டால் உடனே விட்டுவிடுவான். ஆனால் உட்கார்ந்தவன் தானாக எழுந்து ஓடக் கூடாது. மற்றவன் வந்து தொட்டால்தான் ஓடலாம். இப்படி மூன்று முறைக்கு மேல் உட்காரக் கூடாது. அகப்பட்டவன் பிடிப்பவனாக மாறுவான்.

9. கிட்டிப் பந்து :—இரு பக்கங்களிலும் கல்லைக் கட்டிவிட்டு நடுவில் ஒரு தடிக்குச்சியை வைக்கவேண்டும். சுமார் 20 அடிக்கு அப்பால் இருந்து ஒருவன் டென்னிஸ் பந்தால் கிட்டியை யடிப்பான். எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் அடிப்பவர்கள் கக்ஷியிலிருந்து கிளம்பிய பந்தைப் பிடிப்பார்கள். பிடித்தவன் நின்றவிடத்திலிருந்தே கிட்டியை அடிப்பான். எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் அடிப்பவர்கள் கக்ஷியிலிருந்து கிளம்பிய பந்தைப் பிடிப்பார்கள். பிடித்தவன் நின்றவிடத்திலிருந்தே கிட்டியை அடிப்பான். கிட்டி விழுந்து எதிர்க் கக்ஷிக்காரர்கள் பிடிக்காவிட்டால் அடித்த கக்ஷிக்கு ஒரு பழம். கிட்டி விழாமலும், பந்து பறக்காமலுமிருந்து, அடுத்த கக்ஷி தாங்கள் அடிப்பதற்காகப் போட்டிருக்கும் கோட்டிலிருந்து அடிக்க வேண்டும். கிட்டி ஒரு பக்கம் விழுந்து மற்றொரு பக்கம் விழாமல் இருக்கும்பொழுது எதிர்க்கக்ஷிக்காரர்கள் அடித்தால் அவர்களுக்குப் பழம். கிட்டி அடிபட்டுக் கீழே விழுந்து எதிர்க்

கக்ஷிக்காரர்கள் பிடித்தால் ஒருவருக்கும் பழம் இல்லை. குறிப்பிட்ட நேரத்தில் எந்தக்கக்ஷிக்கு அதிக பழமோ அந்தக் கக்ஷிக்கு ஜெயம்.

குறிப்பு: சடுகுடு, பூனையும் எலியும்போன்ற சர்வசாதாரணமான விளையாட்டுகளையும் இவற்றுடன் சேர்த்துக்கொள்ளலாம்.

## போட்டிப் பந்தயங்கள், (Relays)

1. ஓட்ட ஆரம்பக்கோடு ஒன்று போடவும். அதிலிருந்து 40 அடிக்கு அப்பால் ஒரு கோடு போடவும். அங்கு நாலைந்து கற்களை வைக்கவும். பிள்ளைகளை 4, 5 கக்ஷிகளாகப் பிரிக்கவும். கக்ஷியிலுள்ள பையன்கள் ஒருவன் பின் ஒருவனாக வரிசையாக நிற்க வேண்டும். தலைவன் ஊதியவுடன் முதலில் நிற்பவர்கள் ஓடவேண்டும். அவர்கள் எதிரிலுள்ள கோட்டிலுள்ள கற்களைச் சுற்றி வரவேண்டும். சுற்றி வந்து இரண்டாவது பையனைத் தொடவேண்டும். இப்படி எல்லாப் பையன்களும் ஓடியதும் கடைசிப் பையன் கோட்டில் வந்து நின்று கையை உயர்த்தவேண்டும். கடைசிப் பையன்களுள் எவன் முன் வந்தானோ அவன் கக்ஷிக்கே ஜெயம்.

குறிப்பு: புறப்படும் பொழுது பையன்கள் கோட்டிற்குப் பின் நின்று அடுத்தவன் தொட்ட பிறகே ஓடுவதை வற்புறுத்த வேண்டும்.

2. நொண்டி :—மேற்சொன்ன மாதிரியே நொண்டி யடிக்கச் சொல்லவேண்டும்.

3. ரயில் வண்டி .—கக்ஷியிலுள்ளவர்கள் ஒருவர் பின் ஒருவர் நின்று இடுப்பைக் கோர்த்துக்கொண்டு ஓடச் சொல்லவும். நடுவில் சங்கிலி அறுந்தால் உடனே நின்று இடுப்பைக் கோர்க்கச் சொல்லி ஆரம்பிக்க வேண்டும்.

குறிப்பு :—இவ்விளையாட்டிற்கு எந்தக் கக்ஷியிலுள்ள கடைசிப் பையன் முதலில் ஆரம்பக்கோட்டை தாண்டுகிறானோ அந்தக் கக்ஷிக்கு ஜெயம்.

4. கவட்டைப் பந்து:—பையன்கள் அடுக்குவரிசையாக நிற்பார்கள். அவர்களைக் காலையகட்டிக்கொள்ளச் சொல்லவும். முதலில் நிற்கும் பையன் பந்தையுருட்டுவான். பந்து கடைசிப்பையனிடம் போனதும் அவன் எடுத்து முன்வைத்திருக்கும் கற்களைச் சுற்றி முன்நின்று தன் கவட்டையின் வழியாக எறிவான். இப்படியாக முதல்பையன் கோட்டிற்குப் பந்தையெடுத்து வந்ததும் கையை யுயர்த்துவான்.

குறிப்பு :—பந்து வெளியே போனால், எந்தப் பையனுக்குமுன் போயிற்றோ அவன் ஓடி எடுத்துத் தன் கவட்டை வழியாக எறிய வேண்டும்.

5. பழம் பொறுக்கு :—குறிப்பிட்ட இருகோடுகளுக்கு இடையில் ஒவ்வொரு கக்ஷிக்கும் எதிரில்நான்கு அல்லது ஐந்து வட்டங்கள் போட

வும். ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு கல்லை வைக்கவும். முதல் பையன் வட்டத்திலுள்ள கற்களை முதலிலுள்ள பெரிய வட்டத்தில் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். ஆனால் ஒரு தடவைக்கு ஒரு கல் தான் கொண்டுவரலாம். அடுத்த பையன் முதல் வட்டத்திலுள்ள கற்களைப் பாக்கிவட்டங்களில் கொண்டுபோய்ப் போடவேண்டும்.

குறிப்பு :—பையன்களின் வயதிற்குத் தகுந்தாற்போல் கோட்டுக்கிடையிலுள்ள தூரத்தை மாற்றிக்கொள்ளவும்.

## கதை விளையாட்டுகள், (Story Plays)

1. ஆரம்பவகுப்புகளில் கற்பிக்கப்படும் அபிநயப்பாட்டுகளே இங்கே கதைவிளையாட்டுகள் என்றதலைப்பில் கூறப்படுகின்றன. அபிநயப் பாட்டுகளைப்பற்றி இங்குதனியே கூறுவது அவசியமில்லை யாகையால் இந்தத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

2. விளையாட்டைப் பற்றிய பாட்டுகளை பல ஆரம்பாசிரியர்கள் அறிவர். அவைகளையும் இப்பாட திட்டத்தோடு சேர்த்துக்கொள்ளுவது நலம். உதாரணத்திற்காக ஒரே ஒரு பாட்டுமட்டும் இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது.

### விளையாடப் போதல் (V. ராமுடு ஐயர் இயற்றியது)

'சியாமசுந்தர மோகன ஜெய் ஜெய் பாண்டுரெங்கா' என்ற மெட்டு.

பல்லவி

அன்பர் இன்று ஒன்று கூடி
ஆடி ஓடி விளையாடுவோம் — அன்பர்

அனுபல்லவி

இன்ப வெளியில் இனிது சென்று
துன்ப மதனை வென்று — அன்பர்

சரணங்கள்

உடன் பிறந்த பிணியே போக
உடலும் வளமும் உறுதியாக — அன்பர்

காலை மாலை வேளை சென்று
காலுங்கையும் பலம் பெறவே — அன்பர்

கெட்ட பொருள்கள் கழியவென்று
வெட்ட வெளியில் வியர்வை சொட்ட — அன்பர்

தூய வெளியும் தூய காற்றும்
தூய மனத்தை யளிக்கு மன்றோ! — அன்பர்


பலருங்கூடி அழகாய் வாழ
உளவழிகள் பல பழக — அன்பர்

# பை தைத்தல்


ஸ்ரீமதி ஸீ. காந்தா

சென்ற மாதத்தில் வலை அட்டையில் சிறு குழந்தைகளுக்கு என்ன கற்றுக் கொடுப்பது என்று அறிந்தோம். குழந்தைகள் அவ்வித மாகத் தைக்கக் கற்றுக் கொண்ட பிறகு, அவர்களுக்கு வேறு பலவித மான பைகள் தைக்கக் கற்றுக் கொடுக்கலாம். முதலவதாக குழந்தை களுக்கு அட்டையில் பை எப்படி தைப்பது என்பதை அடியில் கவனிப்போம்.

முதலில் சாதாரணமான ஒரு அட்டையை எடுத்துக்கொண்டு, அதை சதுரமாக கத்திரித்து, 1-ம் படத்தில் உள்ளவாறு V வடிவம் போல் ஒரு வடிவம் வரை. பின்பு அவ் வடிவத்தின் மீது ஒரு ஊசியை எடுத் துக்கொண்டு துவாரங்கள் செய்யவும். ஒரு துவாரத்திற்கும், மற்றொரு துவா ரத்திற்கும் மத்தியில் இடம் ஒரே அள வாக இருத்தல் வேண்டும். பின்னர் இரண்டு இரும்பு வளையங்களோ, கண் ணாடி வளையங்களோ, அல்லது வேறு ஏதாவது வட்ட வடிவமுள்ள இரண்டு வளையங்களை எடுத்துக்கொண்டு, அதன் முழுவதும் சாதாரண பொத்தான் தையல் போட வேண்டும். (**Button hole stitches**). படத்தில் காண்பித் திருப்பது போல், அவ்விரண்டு வளை யங்களையும் அட்டையின் இரு பக்கங் களிலும், ஒவ்வொன்றாக வைத்துத் தை.



படம் 1




படம் 2

பிறகு ஊசியில், (**Canvas needle**) நூலை கோர்த்து, நூலின் அடியை வளையத்தில் முடிபோட்டு, அட்டையின் முதற் துவாரத்தின்


வழியாக ஊசியை விடு. அட்டையைத் திருப்பி மற்றொரு வளையத்தின் அடிப்பக்கமாக விட்டு மேற்பக்கமாக இழு. பிறகு ஊசியை, இரண்டாவது துவாரத்தில் விட்டு, அட்டையைத் திருப்பி வளையத்தில் மேல் பக்கமாக விட்டு கீழ்பக்கமாக ஊசியை இழு. இதே மாதிரியாக அட்டையைத் திருப்பியும், நிமித்தியும் சாதாரண கோடுகளாக போடவேண்டும். இக்கோடுகளுக்கு நெடுக்கிழை எனப்படும். இது முழுவதும் முடித்த பிறகு குறுக்கிழை போடவேண்டும்.

ஊசியில் நூற்கோர்த்து, வளையத்தில் முடிபோட்டு 2-ம் படத்தில் காண்பித்திருப்பதுபோல் ஓர் இழை மேலே ஓர் இழை கீழே ஆகிய இவைகள் போல ஒரு அட்டையின் பக்கத்தை முடி. வேண்டுமானால் வர்ண நூல்களையும் உபயோகிக்கலாம். மற்றொரு பக்கமும் இதே விதமாக செய்து முடி. கடைசியாக அட்டையைக் கத்திரித்து எடுத்து விடு. இது ஒரு அழகான U வடிவமுள்ள பையாகும்.

இன்னொரு வகையிலும் அட்டைப் பை செய்யலாம். ஒரு சிறு அட்டையை எடுத்துக்கொண்டு 3-ம் படத்தில் காண்பித்ததுபோல் கோடுகள் வரைந்து மேற் பக்கமும் கீழ்பக்கமும் பற்கள் போல் கத்திரி. நூலை ஊசியில் கோர்த்து, ஓரத்தில் ஒரு பல்லில் முடி போடு. அப்பல்லின் முன்புறத்தில் நூலை சுற்றி கீழ் பக்கமாக கொண்டுவந்து, அட்டையைத் திருப்பி மேற்பக்கத்தில் இருக்கும் பல்லின் பின்புறத்தில் சுற்றி கீழ் புறமாகச் சென்று மேற் புறத்தில் மூன்றாவது பல்லின் முன்புறத்தில் சுற்றி, இதுமாதிரியாக முழுவதும் தை.



படம் 3



படம் 4

இதேமாதிரியாக நூல் மேற் பற்களின் பின்புறமும், முன்புறமும் சுற்றிவரும். கீழே சாதாரணமாக இருக்கும். பின்பு ஓர் இழை மேலே மற்றொரு இழை கீழே ஆகிய இவ்விதமாக குறுக்கிழை கோர்க்கவேண்டும். இதில் அட்டையைச் சுற்றி தைக்கவேண்டும். முழுவதும் முடித்த பிறகு அட்டையைக் கத்திரித்து மேற் புறமாக இழுத்துவிடு.

குண்டு ஊசியில் வைக்கும் திண்டு (Pin-cushion) :—பிள்ளைகள் குண்டு ஊசிகளை பல இடத்திலும் வைத்து விடுகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு ஒரே இடத்தில் வைப்பதற்கு கற்றுக் கொடுக்கலாம். அதற்கு குண்டு ஊசி வைக்கும் திண்டு தான் சரியானது. முதலில் ஒரு அழகான வர்ணத் துணி அல்லது வெல்வெட்டை (Velvet) எடுத்துக்கொண்டு, பை போல் தைத்து, அதன் உள்ளே தலையணைக்கு போடுவதுபோல், பஞ்சை அடைத்து வாயை மூடி தை. அதன் ஓரங்களை சுற்றி வர்ண நூலை வைத்து, தை. பிறகு அதன்மீது குண்டு ஊசியைக் குத்தி வைக்கலாம்.

ஊசி வைக்கும் பை (Needle case) :—மேற்கூறியபடியே ஊசிகள் வைப்பதற்கும் ஓர் அழகான பை போல் தைக்கலாம். நீண்ட சதுரமான ஒரு அழகான துணியை எடுத்துக்கொண்டு, அதன் உட்பக்கத்திலே ஒரு மெல்லிய தான அட்டையை வைத்து, அதன் மீது ஒரு மல் துணியை வைத்து ஓரத்தில் பொத்தான் தையல் தை. பின்னர் அதை இரண்டாக மடித்து வை. அதன் உள்ளே ஒரு சிறு துணி எடுத்துக் கொண்டு, சிறு சதுரமாக கத்திரித்து உள்ளே அழகான நூலால் முடி போடு. அச்சிறு துணியில் ஊசிகளைக் குத்தி வைக்கலாம்.


திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்
(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. 0—8—0. (தபால் சிலவு பிரத்தியேகம்)

: வேண்டுபவர்கள் :

ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்
ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :

# செய்தித் திரட்டு

---

### டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், முதல் செண்டர், ஆரியன்ஸ்கூல், திருச்சி

10—1—'42-ல் இச்சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ E. V. கோபாலன், B.A., L.T., அவர்கள் தலைமையில் கூடிற்று. புதியவருஷ நிகழ்ச்சிக் குறிப்பில் கண்டபடி வியாசம், மாதிரிபாடம், சுற்றறிக்கைகள் வாசித்து விளக்கப்பட்டன. தலைவர் முடிவுரையில் குறிப்பில் கண்டபடி ஆசிரியர்கள் தயாறித்து வந்தால் புதிய பாடதிட்டத்தை சுலபமாக அனுசரித்து நடத்த இயலு மென்பதை விவரித்து சொற்பொழிவு செய்தார். காரியதரிசி ஸ்ரீ S. S. ஸ்ரீனிவாச அய்யங்கார் வந்தனோபசாரம் கூறினார்.

---

### பண்டாரச் சிவன் ஞாபகப் பள்ளிக்கூடம், குலசேகர பட்டினம், பெற்றோர் தினக்கொண்டாட்டம்

11—1—'42-ல் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. S. துரை சாமி முதலியார் B.A., L.T., அவர்கள் தலைமையில் பெற்றோர் தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியர் திரு. N. வெங்கடாசலம் அய்யங்கார் அவர்கள் 'பெற்றோரும் ஆசிரியரும்' என்பது பற்றியும், தற்காலக் கல்விமுறையில் ஆசிரியர்களின் கஷ்டங் களை நிவர்த்திப்பதில் பெற்றோர்கள் எவ்வாறு ஒத்துழைக்கலாம் என் பதை விளங்க எடுத்துரைத்தார். மாணவ மாணவிகளால், கும்மி, கோலாட்டம் முதலியன நடைபெற்றன. தலைவர் முடிவுரையில் ஆரம் பக்கல்வியின் அவசியம்என்பதைப் பற்றியாவர் மனதிலும் பதியுமாறு விளக்கியதுடன் பள்ளிக்குவராத சிறுவர் சிறுமிகளைப் படிக்க அனுப்ப வேண்டுமென்று பெற்றோர்களை வேண்டிக்கொண்டார். தலைமை ஆசிரியர் நன்றி கூறினார்.

---

### போர்டு ஆரம்ப ஆசிரியர்களின் ஐக்கிய சங்கம், கம்பம்

17—1—'42-ல் இச்சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழா மதுரை ஜில்லாபோர்டு கல்வி அதிகாரி ஸ்ரீ S. மகராஜபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதுசம்பந்தமாய் ஏற்படுத்தி இருந்த பொருட் காட்சிசாலையை மதுரை ஸ்ரீமதி பங்கஜத்தம்மாள் திறந்து வைத்தார்கள். பல ஆசிரியர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப் பட்டன. பிறகு 1942-ம் வருஷத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டனர். சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பிற்பகலில், மதுரை தேசசேவதி ஸ்ரீமதி சீதாலட்சுமி அம்மாள் மகா நாட்டைத் திறந்துவைத்தார்கள், ஸ்ரீ முத்துசுவாமி அவர்களும், ஸ்ரீ ராஜமாணிக்கம் அவர்களும் 'சங்க முன்னேற்றம்' 'ஆசிரியர்களின் வருங்காலம்' என்பனபற்றி சொற்பொழிவு செய்தார்கள். சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. ஸ்ரீனிவாசன் அவர்களும் பிரசங்கம் செய்தார்கள்.

---

## ஆரம்ப ஆசிரியர் உபாத்திமைச் சங்கம், கொங்கணபுரம்

24—1—'42-ல் இச்சங்கம் எடப்பாடி உபாத்திமைச் சங்கத்தோடு சேர்ந்து ஆண்டுவிழாவை சேலம் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ V. நடராஜன், B.A., L.T., அவர்கள் தலைமையில் கொண்டாடிற்று. அப்பொழுது திருச்செங்கோடு ரேஞ்சு ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டரும், சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டரும் விஜயம் செய்து முறையே 'ஆசிரியர்களின் கடமை,' 'திருச்செங்கோடு தாலூகா ஆசிரியர்களின் அபிவிருத்தி' என்பனபற்றி விரிவுரையாற்றினார்கள். பின்னர் தலைவர் அவர்கள் முடிவுரையில், ஆசிரியர்கள் பள்ளிப்பிள்ளைகளுக்கு விளையாட்டு மூலமே கல்வி கற்பிக்கவேண்டுமென்றும், பிள்ளைகளுக்கு பள்ளியிலேயே நிறைய வேலைகொடுத்து தேர்ச்சியை வளர்க்கவேண்டுமென்றும் Speed testன் முக்கியத்தைப் பற்றியும் இன்னும் பல அரியவிஷயங்களைப்பற்றியும் விரிவாகச்சொல்லி முடித்தார்.

---

## ஸெயிண்ட் பாற்றிக்ஸ் உயர்தர ஆரம்ப பாடசாலை, பெற்றோர் சங்கம், தூத்துக்குடி

24—1—'42-ல் இச்சங்கம், தேசபக்தரும் வர்த்தகச் செல்வருமான ஸ்ரீ தே. மா. அருணாசல நாடார் அவர்கள் தலைமையில் கூடிற்று. பெற்றோர்களில் பலர் வந்திருந்தனர். மாணவர்கள் பாடி மகிழ்வித்தனர். ஆசிரியர் ஸ்ரீ ஆர். சந்திரகாசம் பிள்ளை 'பெற்றோர் ஒத்துழைப்பும் ஆரம்பப் பாடசாலையின் முன்னேற்றமும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். உயர்வகுப்பு மாணவர்களில் ஒரு சார்பார் ஏகலைவன் என்னும் நாடகத்தை தக்க நடை உடைபாவனைகளுடன் நடித்து வந்திருந்தவர்களைப் பிரமிக்கச் செய்தனர். சாரண ஆசிரியர் சாரணர்களைக்கொண்டு குண்டு வீச்சுகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களினின்றும் பாதுகாப்புவிதிகளை அனுஷ்டித்துக் காண்பித்தது மிகவும் வியக்கத்தக்கதாக இருந்தது. தலைவர் முடிவுரையில் மாணவர்களின் தேர்ச்சியைப்பற்றிப் பாராட்டிப் பேசினார். தலைமை ஆசிரியர் ஸ்ரீ ராஜரத்தினம் அவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்களோடு ஒத்துழைக்கவேண்டிய துறைகளை விளக்கிக்காட்டினார்.

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், சோழவந்தான்

24—1—'42-ல் இச்சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டம் நிலக்கோட்டை ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ N. V. ராஜகோபாலய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கணித ஆசிரியர் ஸ்ரீ பொன்னுசாமி அய்யர் 'கிராம முன்னேற்றமும் ஆரம்ப ஆசிரியர்களும்' என்பது பற்றிப் பேசினார். தலைவர் முடிவுரையில் ஆசிரியர்களின் கடமையைப் பற்றி எடுத்துரைத்தார்.

---

## ஏழாவது எட்வர்வட் காரனேஷன் பள்ளிக்கூடம், பெற்றோர் சங்கம், களக்காடு (திருநெல்வேலி)

1—2—'42-ல் இச்சங்கத்தின் நிர்வாகக்கமிட்டி ஸ்ரீ M. S. முத்துசுவாமி நாயுடு அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. E. S. L. C. பரீக்ஷை விஷயமாய் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன :—

1. E. S. L. C. பரீட்சைக்கு எலிமெண்டரி ஸைன்ஸையும் ஒரு கட்டாய பாடமாகச் சேர்க்கவேண்டும்.

2. பொது அறிவு பாடங்களுக்கு ஒரே பரீட்சைக்குப் பதிலாக சரித்திரம் பூகோளங்களுக்கு ஒரு பரீட்சையும், சிவிக்ஸ், ஸைன்ஸுக்கு ஒரு பரீட்சையும் இருக்கவேண்டும்.

3. இஷ்டபாடமான ஆங்கிலத்தையும் சர்க்கார் பரீட்சையில் சேர்க்கவேண்டும், பிரியமுள்ளவர்கள் ஆஜராகலாம். 35% மார்க்கு வாங்கினவர்கள் High School 4-வது பாரத்தில் சேர்க்கப்படவேண்டும்.

4. உயர்தர ஆரம்பபாடசாலையில் 8-வது வகுப்புக்குள்ள ஆங்கில பாடம் High School 3-வது பாரம் திட்டத்திற்கு இருக்கவேண்டும்.

5. தமிழ் பரீட்சைக்குப்போல் ஆங்கிலப் பரீட்சைக்கும் மாகாண முழுவதும் ஒரேபாடபுத்தகமும், பாடதிட்டமும் 1943-ம் வருஷம் முதலே ஏற்படுத்தவேண்டும்.

---

## போர்டு உயர்தர பாடசாலை, டெங்கணீக்கோட்டை

இப்பாடசாலை 'சிவாஜிகுருப்' சாரணியக்கத்தின் வாரக்கொண்டாட்டம் 23—1—'42 முதல் 29—1—'42 வரை வெகு விமரிசையாக நடைபெற்றது. ஸ்ரீ K. சாமண்ணு, B.A., B.L., தலைமை வகித்தார். பெரியோர்களும், உத்தியோகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர்.

கடவுள் பிரார்த்தனை, கொடி பறப்பித்தல், சாரணர் போட்டி விளையாட்டுகள், முதலுதவி முதலியனவற்றிற்குப்பிறகு ஸ்ரீ K. S. ராமசுவாமி அய்யங்கார் (தலைமை உபாத்தியாயர்) அவர்கள் சாரண இயக்கத்தைப்பற்றியும், பெற்றோர்கள் அதற்குச் செய்யவேண்டிய அனுகூலங்

களைப்பற்றியும் உபன்னியாசம் செய்தார். சாரணர்களுக்கு வெகுமதி அளிக்கப்பட்டது.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், கணியம்பாடி (வட ஆற்காடு)

10—1—42-ல் காலையில் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ. V. K. ராமன் மேனன் அவர்கள், இச்சங்கத்தின் ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்து, காக்ஷிச் சாலையையும் திறந்துவைத்தார். ராவ்பகதூர் ஸ்ரீ. C. துரைசாமி அய்யர் அவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தைப்பற்றி சொற்பொழிவு செய்தார். சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. P. H. வெங்கட்டராவ் அவர்கள் பாடசாலையும் ஆசிரியர்களும்' என்பது பற்றியும், ஜூனியர், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. V. கோபால்சாமி ஐயங்கார் அவர்கள் காக்ஷி சாலையைப்பற்றியும், ஆசிரியர் கடமையைப்பற்றியும் பேசினார்கள்.

---

## போர்டு பாடசாலை, மேலவளவு—பெற்றோர் சங்க வருஷாந்திரவிழா

24—1—42ல் இந்த விழா ஊர் பிரபலஸ்தர் ஸ்ரீ பம்பைச்சாமி யம்பலம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. கல்வியின் அவசியம், பெண் கல்வி, பெற்றோர் கடமை, கல்வியின் மேன்மை, கல்வியின் மையின் கேடு, வாலிபர்கள் கடமை, முதலிய விஷயங்களைப்பற்றி தலைமை ஆசிரியர் ஸ்ரீ துரைராஜ் அவர்களும் இன்னும் மற்ற ஆசிரியர்களும் பிரபலஸ்தர்களும் பேசினார்கள்.

---

## கரூர் தாலுகா, ஜில்லா பஞ்சாயத்து போர்டு ஆரம்ப ஆசிரிய ஆசிரியைகள் யூனியன், கரூர்

17—1—42 ல் இந்த யூனியனின் ஸ்தாபித வைபவம் திருச்சி நாட்டாண்மைக் கழகத் தலைவர் ஸ்ரீ. B. வெங்கிடாசலம் பிள்ளை, B.A., B.L., M.L.A., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கரூர் வழக்காளர் ஸ்ரீ. A. V. சந்திரசேகரய்யர் அவர்கள் 'ஆரம்ப ஆசிரியர் நிலைமையும், கடமையும்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார். பிறகு ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ மருதமுத்து அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் யூனியனைத் திறந்து வைத்து ஆசிரியர்களின் குறைகள் தமக்குத் தெரிந்ததென்றும் அவைகளை நீக்கத் தம்மாலான உதவி புரிவதாயும் சொன்னார்.

---

## திருச்செந்தூர் தாலுகா உதவிபெறும் ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன், குலசேகரபட்டணம்

31—1—42 ல் இந்த யூனியனின் காலாண்டுக் கூட்டம் நடைபெற்றது. டீசர் மானேஜர் Rev. Fr. T. வில்லவராயர் அவர்கள் தலைமை

வகித்தார். பல சென்டர்களிலிருந்தும் சுமார் 70 பிரதிநிதிகள் ஆஜராயிருந்தார்கள். புன்னைக்காயல் ஆசிரியர் **Rev. Br.** டோமினிக் அவர்கள் 'உபாத்தியாயரும் பிள்ளையும்' என்னும் விஷயமாய்ப் பேசுகையில் பிற்காலப் பிரஜைகளை உருவகப்படுத்துவதில் ஆசிரியரின் கடமையை வற்புறுத்தினார்.

தீர்மானங்கள் :—

1. புதிய பஞ்சாயத்து பில்லில், கிராம உத்தியோகஸ்தர்களை அங்கத்தினர்களாக அனுமதிப்பதுபோல், பஞ்சாயத்து போன்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கு முன்போல் ஆரம்ப ஆசிரியர்களும் அபேட்சகர்களாக நிற்க அனுமதிக்கும்படி விதியைத் திருத்தி அமைக்கும்படி மேலதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. கவியரசர் ரவீந்திரநாத் டாகூர் அவர்களின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கிறது.

ஆறுமுகநேரி இந்து உயர்தர பாடசாலையில் அலுவல் பார்த்து வந்த ஆசிரியர்களில் 8 பேர் மானேஜ்மெண்டுக்கும் தங்களுக்கும் ஏற்பட்ட சில தகராறுகள் காரணமாக ஒருமித்து ராஜினாமா செய்து தங்கள் குறைகளை விசாரித்து முடிவு செய்யுமாறு யூனியனுக்கு எழுதப்பட்ட கடிதம் வாசிக்கப்பட்டது. இருதரப்பிலும் விஷயங்களைக் கேட்டறிந்து சமரஸ முடிவுக்கு முயற்சி எடுக்கும்பொருட்டு ஐவர் அடங்கிய தனிக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது.

---

## திருச்சி ஜில்லா லேபர் ஆசிரியர் மகாநாடு

8—2—1942 ல் மாலை 1 மணிக்கு திருச்சி டீசர்ஸ் ஹவுஸில் சென்னை மாகாண ஆசிரியச் சங்க காரியதரிசி ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார், **B.A., L.T.,** அவர்கள் தலைமையில் இம் மகாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. இம் மகாநாட்டிற்கு எல்லாத் தாலூகா லேபர் ஆசிரியர்களும், திருச்சி ஜில்லா தாழ்த்தப்பட்டோர் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர்.

பிரபல வக்கீலும் ஜில்லா லேபர் அட்வைசரி போர்டு மெம்பருமான ஸ்ரீ **A. M. J.** தனசாமி பிள்ளையவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்தார். பிறகு லேபர் ஸ்கூல் ஆசிரியர்கள் மிகவும் சிரத்தையுடன் வேலைசெய்ய வேண்டுமென்றும், அவர்களுடைய குறைகளை நீக்க தான் முயற்சிப்பதாயும், கல்வி டைரக்டர்களுடைய தேர்ச்சி பரீக்ஷைகள் லேபர் ஸ்கூல்களுக்கு பொருந்தாவென்றும், ஆதித் திராவிடப் பிள்ளைகளுக்கு இடைவேளையில் உணவளித்தால் பள்ளிக்கூட ஆஜர் விருத்தியடையுமென்றும் உணர்ச்சி ததும்ப சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முகவுரையில் லேபர் டிபார்ட்மெண்டு தாழ்த்தப்பட்டோருக்குச் செய்துவரும் வேலையைப் பாராட்டியும் லேபர் பள்ளிக்கூடங்களுக்கு தகுந்த உபகரணங்கள் கட்டிட வசதி முதலியன செய்தால் பிள்ளைகள் கவர்ச்சியாய் பள்ளிக்கூடம் வரும் ஆஜரும் விருத்தியடையும் என்றும், லேபர் ஆசிரியர்களின் நிலையையும் நிரந்தரமாக்கி மற்ற முனிசிபல், போர்டு ஆசிரியர்களைப்போல் லீவு, பிராவிடெண்டு பண்டு முதலிய சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுத்தால் லேபர் ஆசிரியர்கள் உயர்தரமான வேலைசெய்ய முடியும் என்றும் கூறினார். தவிர, பள்ளிக்கூடங்களை மேற்பார்வையிடவும், அவைகளை ஆஜர் விருத்தி செய்வதற்கும் உத்தியோகப் பற்றற்ற பிரமுகர்களை நியமிக்கும்படிக்கும் போலீஸ், கிராமாதிகாரிகள், இவர்களைக்கொண்டு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படாத பிள்ளைகளின் பெற்றோர்களை திட்டம் செய்யும்படிக்கும் யோசனையும் கூறினார்.

பின்பு திருச்சி ஜில்லா கில்டின் லேபர் ஆசிரியர் நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரையில் உபாத்தியாயர்கள் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டுமென்றும், அவர்களின் உரிமைகளைப் போராடி வாங்கித் தருவதாயும் உறுதி கூறினார். காரியதரிசி வந்தனோபசாரம் கூற மகாநாடு இனிது முடிவுற்றது.

---

## உயர்தர போதனாமுறை பாடசாலை
## காந்திஜி போதனாமுறைப் பாடசாலை, ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம்

நம் நாட்டின் குழந்தைகளின் வாழ்விற்கும் அவர்கள் மூலம் நாட்டின் எதிர்காலத்திற்குமே அடிப்படையாக இருக்கும் ஆசிரியர்களுக்கு தேசிய லக்ஷியப்படி பயிற்சியளிப்பதின் அவசியத்தை உணர்ந்து வித்யாலயத்தில் காந்தியடிகளின் பெயரால் உயர்தரப் போதனாமுறைப் பாடசாலை ஒன்று நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அது அடுத்த பள்ளி வருஷத்தில் ஆரம்பமாகும். இதுவும் வித்யாலயத்தைப்போலவே குருகுல முறையில் நடைபெறும். சேர விரும்புபவர்கள் குறைந்தது ஆரும்பாரமாவது தேறியவர்களாக இருக்கவேண்டும். விண்ணப்பம் நாளது ஏப்ரல் மாதத்திற்குள் போடவேண்டும். முழு விபரங்கள் காரியதரிசி, ஸ்ரீராமகிருஷ்ண வித்யலயம் போஸ்டு, கோவை ஜில்லா என்கிற விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

---

# பத்திராதிபர் குறிப்பு

## போர் பீதியும் சென்னை ஆரம்ப ஆசிரியர்களும்

போர் பீதி அதிகரித்து வருகிறது. சென்னை வாசிகளில் பலர் வெளியூருக்குச் செல்கின்றனர். முக்கியமாக பெண்டிர்களும் குழந்தைகளும் சென்னையைவிட்டு வெளிச் செல்கின்றனர். இம்மாதிரி வெளியேறுவதால் சென்னை ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக் குறைந்து கொண்டே வருகின்றது உதவி பெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் கஷ்டம் அதிகரித்து வருகின்றது. சம்பள வருமானம் குறைந்துவிட்டது. கிராண்டு விதிகள்படி எத்தனை ஆசிரியர்களை வைத்திருப்பது என்று தெரியாமல் திகைப்பு ஏற்பட்டுள்ளது. சென்ற மாதத்தில் நடந்த ஒரு மகாநாட்டில் மாகாணக் கல்வி அதிகாரி, இப்பீதியைக் காரணமாகக்கொண்டு ஆசிரியர்களின் சம்பளத்தைக் குறைப்பதோ அல்லது ஆசிரியர்களை வேலையினின்று நீக்குவதோ அநீதியாகுமென்று கூறினது ஆசிரியர்களுக்கு மனத்தேர்தல் கொடுத்துள்ளது. தவிர, ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு மார்ச்சு மாதத்தில் கொடுக்கப்படும் கிராண்டு, டிசம்பர் மாதத்திய புள்ளிகளின் பேரில் கொடுக்கப்படுமாதலால் ஆரம்ப ஆசிரியர்களுக்கு உடனே ஒருவித நிர்ப்பந்தமும் ஏற்படாது என்று எண்ணியிருந்தோம். சில நாட்களுக்கு முன்பு சென்னை ஆரம்பப் பள்ளிக்கூட மானேஜர்களுக்கு கல்வி இலாகாவிலிருந்து ஒரு சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறதாம். இதன்படி மேமீ 15உ வரை கிராண்டுகள் டிசம்பர் புள்ளி விவரத்தையொட்டியே அளிக்கப்படுமென்றும் அதற்குமேல் அம்மாதிரியான சலுகை காட்ட முடியாதென்பதும் கண்டுள்ளதாகத் தெரிகிறது.

இதன்விளைவாக பல ஆரம்பப் பள்ளிக்கூடங்களில், அப்பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கு 3 மாத நோடீஸ் கொடுக்க யோசித்திருப்பதாகவும், அப்படிச் செய்யவேண்டுமென்பதே கல்வி இலாக சுற்றறிக்கையின் நோக்கமென்றும் சொல்லப்படுகிறது. போர் நெருக்கடியில் சில முன் ஜாக்கிரதையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது அவசியமே. எனினும் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை வேலையினின்று நீக்குவது என்பது கவலைக்கிடம் தருவதுமல்லாமல் துரைத்தனத்தார் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய விஷயம். இவ்வாறு நோடீஸ் கொடுக்கப்படும் ஆசிரியர்களை வேலையில் அமர்த்தி வைப்பதை நமது துரைத்தனத்தார் தமது பொறுப்பாகக் கருதவேண்டும். உள்நாடுகளில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும். அங்கு புது ஆசிரியர்கள் நியமிக்கவேண்டியிருக்கும். அப்படி புது ஆசிரியர்கள் நியமிக்கப்படும்பொழுது சென்னையினின்று நோடீஸ் கொடுக்கப்பட்ட ஆசிரியர்களையே நியமிக்கும்படி உத்திரவு இடுவது நலமாயிருக்கும். தவிரவும் இவ்வாசிரியர்களுக்கு, சென்னை ஜனங்கள் குடியேறுமிடத்தில் புதுப்பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கவேண்டிய சாதகங்கள் அளிப்பதும் இவ்வாசிரியர்களுக்கு நன்மைபுரிவதாகும்.

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர் நெ. 1506

# அசோகா சுகந்த பாக்கு தூள்

தயாரிப்பவர்:

எம். கே கிருஷ்ண செட்டி,
அசோகா பாக்டரி,
கோயமுத்தூர்.

---

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

## சுவாமி விவேகாநந்தர்

## ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ | விவேகாநந்த | சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, | ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, | ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, | ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, | ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

*Regd. No. M. 3473*


## S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

520, HIGH ROAD, TRIPLICANE.

### செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள் :

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள் :

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,500 |

### அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினுல், கிடைக்கக்கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.


Printed by L. Raghuraja Bharati at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by **Mr. M. S Sabhesan**, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.